உ

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

427

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்ருண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனர்.

அ-கள குருகுலம், மாம்பாக்கம்; விசய, புரட்டாசி; 9—10—53 தளிர்-54

திருக்குறள் சிறப்பு

ஒப்பற்ற ஒழுக்க நூல்

ஒழுக்கங் கூறவந்த நூல்கள் பல. அவற்றுட் பல காலச் செலவில் வழக்கு வீழ்ந்தன; பெயரளவில் மட்டும் போற்றப் படுவன. திருக்குறள் தோன்றிப் பன்னூற்றுண்டுகள் சென்றன ஆயினும், அஃது இன்றும் பெருவழக்கிற்று யுளது; மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செலுத்திப் பயனடையப் பெரிதும் உதவி செய்கின்றது. அறத்தின் வேரையும் அதன் உயிர்ப்பையும் பற்றி ஆசிரியர் திருவள்ளுவர் நூல் செய்துள்ளாராதலின், அஃது என்றும் நின்று நிலவுவதாயும், என்றும் இன்பம் பெருக்குவதாயும் விளங்குகின்றது. அறத்தின் பரிசை உள்ளவாறு விரித்துரைப்பதில் திருக்குறள் இணையற்ற நூல். உலகத்துத் தோன்றிய அற நூல்கள் எல்லாவற்றுள்ளும் அறத்தை எஞ்சாது முழுதுற விரித்த பேரற நூல் இஃதொன்றே என்று கொள்ளலாம்.

இருமைசால் பெருமறை

திருக்குறள் அறத்தினை உணரத்தலைப்படுவார்க்கு ஒரு பேரறநூல்; அரசியலை யறியவிரும்புவார்க்கோர் அரசியல் நூல்;ஞானத்தை விரும்புவார்க்கு ஒரு ஞான நூல்;கவிச்சுவை விரும்புவார்க்கொரு காவியம்;காமச்சுவை விரும்புவார்க்கொரு காம நூல்;பேரின்பம் விரும்புவார்க்குஒருபேரின்ப நூல் வாழ்க்கை நெறியறிய விரும்புவார்க் கொரு வாழ்க்கை வழிகாட்டு நூல். அந் நூலைப்பயில்வார் பெரும்புலமையும் ஒட்பமும் பெறுவர்; அதன் கருத்துக்கள் பல உலகம் அமைதிபெற்று இன்ப நலம் அடைதற்கு ஏற்ற முறைகளாயுள்ளன. அதன் நெறியின் கண் வாழ்பவரே 'வாழுநம்' என்னும் செருக்குடன் வாழ்ந்து இம்மையில் இன் புற்றுப் பின் வீடு பேறடைவ . இம்மைக்கும் மறுமைக்கும் இவ்வாறு இனிய முறையில் வழிகாட்டும் நல்ல ஒரு மறை நூல், எல்லாரும் ஒப்பும் உலகப் பொதுமறை நூல் வேறில்லை.

—சாத்தூர் T. S. கந்தசாமி முதலியார் B A , B L.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

உள் நாடு	ரூ.	4 0 0
வெளி நாடு	ரூ.	6 0 0
தனித் தாள்		0 1 0
ஆயுள்—கையொப்பம்	ரூ.	100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, புரட்டாசி,	தளிர்
5	9-10-53 வெள்ளி	54

புகழும் பணியும்

உலகின்கண் தோன்றியவர்களனைவரும் தோன்றும்போதே புகழுடன் தோன்றினரல்லர்; தோன்றவுமியலாது. தோன்றிய பின்னரே சமூகத்தைச் சார்ந்து வாழ வழி கற்கின்றனர். அங்ஙனம் ஆய்ந்தறிந்து கற்றவர்கள் தங்கள் வாழ்நாளைச் சமூகத்தின் மேன்மைக்கும் அச் சமூகத்தில் சிறந்தவரின் சிறப்பிற்கும் மன, மொழி, மெய்களாலும் பிறவற்றாலும் விழுமிய தொண்டு புரிந்து மக்களின் மனங்கனிந்த மாறாத புகழ்ச்சிக்கு உரியவராவர்.

இங்ஙனம் வந்துறும் புகழே உலகம் பொன்றுந் துணையும் சோராச் சுடர் விட்டு விளங்க வல்லது!

இப்பொழுதும்பலர்சமூகத்திற்காகவும் நாட்டிற்காவும் தொண்டு புரிவதாகக் கூறிக்கொண்டு திரிகின்றனர். இவர்கள் மக்களை மயக்கித் தம் வயப்படுத்திக்கொண்டு சொந்த நலத்தை நாடும் சுயநலப் பேய்களாக—தன்னலங் கருதும் தன்மையர்களாகக் காண்கின்றனர்.

இவர்கள் தங்கள் சுக வாழ்க்கையையும் நன்மையையுமே பொருட்டாக மதித்துப் பொருள் தேடுவதிலேயே நாட்டங்கொண்டு, நாட்டிற்கும் மக்களுக்கும் நலம் புரியாது பொன்றாப் புகழைப் பெறுதொழிகின்றனர்.

பொருள் பற்றிய பூசல் உலகின்கண் உள்ளதென்றாலும், நலம் பல செய்தலே நன்மையுடைத்தாம். அறிவிற் சிறந்தோர் பல்லோர் வாழ்க்கையிலும் பொருள் புகழுடன் போட்டியிடுகின்றது.

ஆய்ந்தறிந்தார் பொருளின் புகழ்நிலையாத் தன்மையை அறிந்துபொருள்வந்துற்றபோதே அதன் துணைகொண்டு அதன் வழியே நிலையுற்ற புகழைப் பெறுவர். இதை நம் குறளாசிரியர் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தோன்றுமாறு,

"அற்கா இயல்பிற்றுச்
செல்வம் அது பெற்றால்
அற்குப ஆங்கே செயல்"

என்ற இக் குறட்பாவினால் விளங்க வைக்கிறார்.

மனிதர்கள் தங்கள் நிலையற்ற நீண்ட வாழ்க்கையை ஐயறிவுள்ளவைபோல் உண்ணுவதோடும் உறங்குவதோடும் தம் வாழ்க்கையைக் கடத்துவார்களேயானால் அவர்கள் உலகின் கண் தோன்றியாது பயன்? ஆறும் அறிவாகிய பகுத்தறிவைப் பெற்று என்ன பயன்?

இதனை உள்ளமைத்து வள்ளுவர் மனிதர்கள் தங்களகன்ற வாழ்க்கையில் அழிவிலாப் புகழைப் பெற வேண்டுமென்கிறார். இதை எவ்வாறு பெறுவது? அதுதான் கொடுத்துப் பெறும் புகழ்—ஈதல் செய்து பெறும்புகழ்—அறம் செய்து பெறும் புகழ்.

"ஈதல் இசைபட வாழ்தல் அது
வல்லது
ஊதிய மில்லை யுயிர்க்கு"

என்ற குறட்பாவில் அழகுற அமைத்துக் காட்டி அழியாப் புகழைப் பெற்று விளங்குகின்றார்.

மேலே நாம் மக்களின் நெடுங்கால வாழ்க்கையில் அடையக்கூடிய புகழ் பற்றி ஒருவாறு அறிந்தோம்.

எனவே ஒவ்வொருமனிதனும் தன் அன்றாட வாழ்க்கையில் செயலாற்றும் போது மிக்க திறமையாக— செம்மையாக — சிறப்பாகச் செயலாற்றி மற்றவர்களின் புகழுக்கு உரியவனாக வாழவேண்டும்.

இவ்வாறு செம்மையாகச் செயலாற்றத் திறமையற்றவர் ஒரு சிறந்த காரியத்தை மேற்கொள்ளாதிருப்பதே நன்று; புகழுக்கு இழுக்கு உண்டாகாமலிருப்பது நன்று என்று நவிலுகின்றார். வள்ளுவர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக
அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

இஃதறிந்து ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் புகழுண்டாகுமாறு வாழ வள்ளுவர் வகுத்த வழி நின்று நாம் இறந்துபட்டபோதும் நம்முடனிறக்காத புகழொளியை உலகின் கண் சுடர்விடச் செய்யவல்ல பணியாற்றுவோமாக!

—க. ராமு

* பணிசெய்ய வாரீர்! *

(முத்துசாமி)

(முன் தொடர்ச்சி)

சிற்சில நேரங்களில் அத்தி பூத்தாற்போல சில நல்லறிஞர்கள் சற்றே அரும்பி மறைந்து விடுவதும் உண்டு. ஒரோவொருகால் ஒரே அறத்தைப் பலரும் மேற்கொண்டு மிகைபடச் செய்வதும், ஏனைய அறிஞர்கள் செய்யாமலே ஏட்டளவாக நிற்பதும் உண்டு. மாநாடுகள் கூட்டித் தெரியாத மக்களுக்கு எடுத்துச்சொல்வது ஓர் அறந்தான். ஆனால் அது ஒன்றுதான் நாட்டில் நடைபெற வேண்டுமா? மற்றவையெல்லாம் நடைபெறவேண்டாவோ? நடுவு நிலைமை, வாய்மை, புலான் மறுத்தல், விருந்தோம்பல், உழவு, பெரியாரைத் துணைக்கோடல் முதலிய செயல்கள் நடைபெற வேண்டாவா?

அறத்தை நூற்று முப்பத்து மூன்று என்று எப்பொழுது வகைப்படுத்திக் கொண்டோமோ அவ்வளவும் நடைபெற வேண்டுமல்லவா? இல்லையாயின் அறத்தின் ஒரு கூறுதான் செயல்படுத்தியதாகுமன்றோ? அதனோடு அமைதியடைந்து நின்றால் அது முழுமையாகுமா? எதிலும் முழுமையும் நிறைவும் பெறுதலன்றோ சிறப்பு?

ஆகவே அறம் முழுமையாகச் செயல்படவேண்டுமாயின் திருக்குறள் முழுமையும் செயற்படவேண்டும். அதனைச்செயற்படுத்த வல்லவர்களே பணியாளர்கள். அத்தகையோரையே "பணி செய்ய வாரீர்" என்று அழைக்கின்றது, மாம்பாக்கத்தில் எழுகின்ற குரல்!

நாட்டு மக்கள் ஒற்றுமையின்மையால் பிரிவு பட்டு நிற்கின்றனர். அதனால் குழப்பமும் பூசலும் மலிகின்றன. மக்கள் அனைவரையும் திருவள்ளுவரையொத்த ஒரு தலைவரின் கீழ்க் கொண்டு வந்து விட்டால் ஒற்றுமைப்பட்டு நிற்பர். பல்வேறு திறத்திலுள்ள மக்களை ஒன்றுபடுத்த அனைவரிடமும் ஊடுருவி நிற்கும் பொதுப்பண்பால்தான் முடியும். அத்தகைய பொதுப் பண்புகளைக் கொண்டு ஆற்றல் மிக்க ஒருவர் ஒன்றுபடுத்த முற்பட்டால் மக்கள் ஒன்றுபடுதல் கூடும். அதனாலேயே தாயுமானவர் "சேரவாரும் செகத்தீரே" என்றார். செகத்தீர் என்றது செகத்தில் இருப்பு மாத்திரம் கொண்ட பொதுவாந்தன்மையால் அழைத்த அழைப்பாகும்.

திருக்குறள் பொதுமைக் கருத்துக்களைக் கொண்ட நூல். அதனைச் செயல்படுத்தும் அமைப்பில் யாவரும் வேறுபாடுகள் கருதாது ஈடுபடுவர். திருக்குறளைக் கையில் வைத்துக் கொண்டு "பணி செய்ய வாரீர்" என்று அழைத்தால் எல்லோரும் வருதற்கு அடிப்படைக் காரணம் உண்டு. ஒற்றுமை அப்பொழுதுதான் உண்டாகும். ஆகவே, திருக்குறளுக்கு ஒரு செயலக அமைப்பு இருந்து, அது, பல்வேறு திறப்பட்ட மக்களையும் அழைத்தால் மக்கள் அனைவரும் அதில் ஒன்றுபடுவது நன்மை தருமல்லவா? அத்தகைய அமைப்பே மாம்பாக்கம் குருகுலம்! அதன் அழைப்பே "வித்தகம் பேசி வீண்காலம் கழிக்க வேண்டாம்; பணி செய்ய வாரீர்" என்பது.

நாட்டிலே நற்றொண்டுகள் செய்வதற்கென்று ஏற்பட்ட அமைப்புகள் பல இருக்கலாம். எல்லாம் பொதுமையின் அடிப்படையில் செயல் செய்வன அல்ல. ஒரு சைவ நிலையத்தில் ஒரு வேதாந்தியோ, அல்லது வைணவரோ சேர்ந்து பணி செய்ய இசையார்; அல்லது ஒரு கிறித்தவர்தான் சேர இசைவாரா? சமரசப் பெரியாரான இராமலிங்கர் பெயரால் தோன்றிய சங்கங்களேயாயினும் ஒரு பௌத்தர் சேர்தல் அருமை.

ஆகவே, நாட்டுக்கு இப்பொழுது பொதுமைக் கருத்துக் கொண்டு செயல் செய்ய முன்வரும் அமைப்பு மிக இன்றியமையாததொன்று. அதுவே மாம்பாக்கம் குருகுலம்! அதன் அழைப்பே "பணி செய்ய வாரீர்" என்பது.

பொதுமையில் சிறப்புக்கள் தழுவி நிற்கவேண்டும். பொதுமை உடல் என்றால் சிறப்புக்கள் உடலின் வெவ்வேறு பாகங்கள் எனலாம். உடலின் வெவ்வேறு பாகங்கள் உடலாகிய பொதுமையில் ஒன்றி நிற்பது போல, பொதுமை அடிப்படையில் ஏற்பட்ட அமைப்பில் சிறப்பு அமைப்புகள் சேர்ந்து ஒற்றுமைப் படவேண்டும்.

ஒப்பற்ற ஒரு பொதுமை நூல் திருக்குறள் என்றால், மாம்பாக்கம் குருகுலம் அதன் செயலமைப்பு! ஆதலால் அது ஒப்பற்ற ஒரு பொதுமை அமைப்பாகும்.

* அருள்நாத ஒலி *

வெல்லுமட்டும் பார்த்து
வெகுளியெலாம் விட்டகன்று
செல்லுமட் டுஞ்சிந்தை
செலுத்துவது மெக்காலம்?

பலவிடத்தே மனதைப்
பாயவிட்டுப் பாராமல்
நிலவரையி னூடேபோய்
நேர்படுவ தெக்காலம்?

ஆவியுங் காயமும்போ
லாத்துமத்து நின்றதனைப்
பாவி யறிந்துமனம்
பற்றிநிற்ப தெக்காலம்?

ஐந்து கரத்தானை
அடியிணையைப் போற்றிசெய்து
நெஞ்சிற் பொருந்தி
நிலைபெறுவ தெக்காலம்?

—பத்திரகிரியார்.

நம் வாழ்வுக்கு முதலாகிய பொருள் நாதமுடிமேல் விளங்குகிறது. தத்துவக்கூட்ட வரிசையில் கடைசியாக நிற்பது நாதம்; நாதத்தைச் சேர்ந்து அருளில் படிந்து மெய்ப்பொருளுக்குப் போகவேண்டும். இதற்கு இடையிலுள்ள தத்துவங்களைக் கடக்கவேண்டும். கடந்து செல்லும் வழியை ஆசிரியர் காட்டுகிறார். சிலர் பேச்சுக்களில் வெண்ணெயைத் திரட்டி எடுக்கவேண்டியிருக்கிறது. ஆசிரியர் வெண்ணெயையே கொடுத்து விடுகிறார். நாளும் பேர் அளவில் வந்துகொண்டே இருக்கிறது. வெண்ணெய் அகப்படவில்லையே என ஏங்கியிருந்த காலம் போய், அளவுக்கு மிஞ்சிய வெண்ணெய் கிடைக்கிறபோது செரிப்பதற்கில்லையே என எங்க வேண்டியிருக்கிறது.

எவ்வமுறு சிறியனேன்
ஏழைமதி என்னமதி
இன்னமதி யென்றுணர்கிலேன்
இந்தமதி கொண்டு நான்எந்தவகை
அழியாத இன்பநிலை
கண்டு மகிழ்வேன்

என வள்ளலாரைப்போல அம்மையிடமும், பத்திரகிரியாரைப் போல அப்பனிடமும் அழ வேண்டியதைத்தவிர வேறு வழி தெரியவில்லை. வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே என்று மணிவாசகரும் வழி காட்டுகிறார். உண்மையாகவே உள்ளம் உருகி அழுபவனின் கண்ணீரை மாற்றி மலங்கெடுத்த பெருந்துறைப் பெருமானே என்றும் கூறுகிறார். இடையில் உள்ளவைகளைக் கடக்க ஆசிரியர் துணைகொண்டு அருள்வாக்கின் வழி நடந்து புலம்புதலைத் தவிர வேறு வழி உண்டா?

அருள் வழி நின்று விக்கின விநாயகரையும், முருகப் பெருமானையும் வணங்கி இரு ஆதார வழிபாடுகளை முடித்துக்கொண்ட நாம், பள்ளிப் படிப்பிலிருந்து அனுபவப் படிப்புக்கு வந்திருக்கிறோம். இதன் பயனாக வார வழிபாட்டில் அருள்நாத ஒலியைப் பெற்று, கழுக்குன்றக் காட்சியான் ஈந்த அருள்நாத ஒலியையும் பெற்று, அடியேன் என்ற நிலையில் இருதாள் வனசந்தர என்று இசைவாய் எனக் கேட்கும் பேறும் பெற்று, சாத்திரங் கொண்டு உலக வாழ்க்கையிலும், தோத்திரங் கொண்டு வழிபாட்டிலும் அருள்நாத ஒலியை இணைத்துக் கொள்ளும் பேறு பெற்றோம். இப் பேற்றைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ள அவனருள் உதவ வேண்டும்.

ஞானத்தின் பல நிலைகளைக் கேட்கும் அளவில் அனுபவித்தோம். நம்மிடத்திலும் ஓரளவு ஞானம் இருப்பதனால் தான் தக்க நிலைமையில் தொடர்ந்து வருகிறோம். இருக்கிற ஞானங் கொண்டு வருகிற ஞானத்தைப் பெறுவது நம் உரிமையினால் இருக்கிறது. அருள் துணை இருக்கும்போது உரிமையில் செல்லுவது கடமை. நம்மால் அறியக்கூடாத பதத்தை, ஆண்டவன் கருணையினால் தக்க துணை கொண்டு நம்மால் அறியும்படி வைத்திருக்கிறான். அதை அறியாது நாம் கெடுகிற நிலைகளிலும் போகலாம். எது நம் உரிமை?

ஓட்டி நடந்து வெற்றி காணுவது எப்படி என்பதை ஆசிரியர் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். மனத்தில் வெற்றி கொள்ளுவது எப்படி? வெளிப் பொருள்களிலேயே சதா அலைந்துகொண்டிருக்கும் மனத்தை, அதன் இயல்புபடியே வெளிப் பொருளாக உள்ள, ஆனால் சூட்சுமமாகவும் உயர்ந்ததாகவும் உள்ள நாதத்தில் ஈடுபடுத்தி விடுவோமானால் அதன் குறும்புத் தனம் அடங்கி விடுகிறது. அலைவற்ற மனம் அமைதியில் ஆழ்கிறது. மேலும் மேலும் ஆழ்ந்து சென்று ஆழ்ந்து அகன்ற நுண்ணியனைத் தேடுகிறது. வெளியில் எவ்வெவைகளைபோ தேடிக்கொண்டிருக்கும் மனத்தை வெளியில் வாதே, உள்ளேபோ, உள்ளே போய் உறங்கிவிடாதே, நாதத்தைச் சேர்ந்து நாதனைத் தேடு என்று தேடவேண்டிய உறு பொருளைத் தேட வைக்கிறார் ஆசிரியர்.

கழலென்னும் ஞானம் கிடைக்கப் பெற்றும் இருதாள் வனசம் தர என்று இசைவாய் என்று கேட்கும் பேறு பெற்ற நமக்கு ஆசிரியர், திருவடி ஒலியைக் கொடுத்து அதை வாழ்க்கையில்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

அருள் துறை

தேவாரக் காட்சிகள்

மலை. சிவ சிதம்பர சித்தன்
(குமரிக்கண்ட ஆராய்ச்சிப் புலவர்)

காழிதனி லன்றுசுரர் முனிவர்
சித்தர்கள் யோகர்
கருது சமயாதிபர்களும்
கைகுவித்தருகில் நின்றேத்த
மூவாண்டிற்
கனிந்து மெய்ப் போதமுண்டு
கனிமதுர மொழுகு செம்பதிகச்
செழுஞ்சொன்மழை
கண்ணுதற் பவள மலையிற்

கண்டுபொழியருண்மூகிற் சம்பந்தவள்ளலாங் கடவுளர் இயற்றிய தேவாரப் பதிகங்கள் கற்பவர் நெஞ்சைக் கரைந்துருக்குந்தன்மையவாயும், ஓதுபவர் ஓசையின் இனிமையில் உலகத்தை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தும் இயல்பினவாயும் ஆயிரக் கணக்கில் உள்ளன. நாவுக்கரசர் தேவாரத்தில் வேண்டுதல்களே அதிகமாக இருக்கும். சுந்தரர் தூய் மறையில் இயற்கைப் புகழ்களே மலிந்திருக்கும். ஆனால் எங் கடவுளாம் ஞானக் குழந்தையின் நற் கீதங்கள் ஒவ்வொன்றிலும் மறைப்பொருளும் மறையவன் புகழுமே மலிந்திருக்கும் எனலாம்.

காலைக் கதிரவன் தன் பொன்னொளி வீசிக்கொண்டு புறப்பட்டுவிட்டான். இறைவ னடியார் குழாங்கள் விண்ணவர் துதிக்கும் ஓசையையும் விஞ்சும்படியாகவே ஓசையைக் கிளப்பி, ஆண்டவனுடன் இரண்டறக் கலக்கும் பணியில் ஆழ்ந்திருந்தனர். இச் சமயத்தில் காழிப் பதிக் கோயிலின் குளக்கரையில் ஈராட்டைப் பருவம் நிரம்பா நின்ற தளர்நடைக் குழந்தையொன்று கீத ஓசையைக் கிளப்ப ஆரம்பித்தது.

காலைவணக்கம்முடிக்கக் குளத்திற்கு சென்ற சிவபாத இருதயர், தன்னைத் தொடர்ந்து வருந் தனயனை விட்டுச் செல்ல மனமில்லாமல் தன்னுடன் அழைத்துச் சென்று, கரையில் இருக்கும்படி கூறிவிட்டுக்குளத்திற்குள் இறங்கினர். வெகு நேரமாகியும் தந்தையரைக் காணாத தனயர் தம் தமிழ்மணம் பரவிச் சைவ உலகந் தழைக்கவும், சமண் உலகத்தின் மனம் மாறுதலடையவும் தருணம் நெருங்கிவிட்டதால், "அம்மே! அப்பா!" என்று கூய்க் கூய் அழ ஆரம்பித்தனர். இச் சத்தம் குளத்திற்குள் தியானத்தில் அமர்ந்திருந்த தந்தையருக்குக் கேட்கவில்லை.

ஆனால், தனிப்பெருங் கருணையங் கடலாம் அருட்பெருஞ் சோதித் தந்தையரின் காதிற்கும் கேட்காமல் இருக்குமா? உடனே பரமசிவன், ஊடேயே நின்றும் விண்ணவர் ஓசையையும் விரும்பவில்லை; உலகத்தில் நின்று இறைஞ்சும் வேதியரின் வேத ஓசையையும் வேண்டவில்லை; உமையாளுடன் குளக்கரைக்கு விரைந்தனர். தனயனைக் கண்டதாகமடங்க அணைத்து உச்சி மோந்து, உமையாளிடம் ஓதாதுணரப்போகும் உலவா ஞானக் குழந்தையைத் தந்தார். உமையாளும் தம் அருட்பாலைப் பொற்கிண்ணத்திலிட்டு ஞானக் குழந்தையருக்கு ஊட்டினார். ஞானப் பாலையுண்டதும் குழந்தையார் ஞானக் குரவராகிவிட்டார். உடனே ஞானோதயம் உண்டாகி அவ் விநாடியிலே சகலமும் உணர்ந்த ஞானியாராகிவிட்டார். தெய்வத் தந்தையரும் உடனே மறைந்துவிட்டனர். சிவ ஞானக் குழந்தையோ ஞானக்கடலிலே நீந்திக் கொண்டிருந்தது.

அச்சமயத்தில் பூசையை முடித்துச் சிவபாத இருதயர் கரைக்கு விரைந்தனர். தனயனைக் கண்டனர். எக்கோலத்தில் கண்டனர்? கையில் பொற்கிண்ணமும் வாயில் ஒழுகும் பாலுடனும் கண்டனர். உடனே கோபம் கொண்டனர். "யாருனக்குப் பால்தந்தது?" என்று அதட்டிக் கேட்டனர். இதனால் உலக உணர்வு வரப்பெற்ற குழந்தை, ஓத ஆரம்பித்தது, இனிய கீதங்களை. அதைக்கேட்டு— வேத ஓசையில் ஆழ்ந்திருந்த வேதியருக்கு அதுவரை அடங்காதிருந்த மனமும் அடங்கி, உருகி அன்பில் திளைக்க ஆரம்பித்தது. விண்ணவரின் பூசை ஓசையோ, இக் கீத ஓசையினால் சிறப்பற்றதாகியது. என்னை? நாளும் உடனிருந்தே துதிக்கும்

விண்ணவருக்குக் கிடைக்காமல் உலகத்தில் விந்தை பல நிகழ்த்தப் போகும் வேதியருக்கன்றோ ஞானப்பால் கிடைத்தது.

யாருனக்குப் பால் தந்ததென்று கேட்ட தந்தையாருக்கு விடையாக, கோபுரத்திற்குமேல் தன் கண்ணிற்கு மட்டுந் தெரியும் அம்மை அப்பரின் உருவத்தை ஒரு கையினால் சுட்டியும், மற்றொரு கையிற் பொற்கிண்ணந் தாங்கியும், தந்தையரின் கேள்விக்கு விடையாகத் தமிழ்வேதம் பாட ஆரம்பித்தனர் தனையர். வேதத்தில்சிறப்பித்துக்கூறப்படும் ஒலி ஓம் என்பது. அது பிரணவம் என்று எல்லா மதத்தினராலும் புகழ்ந்து பாராட்டப்படுவது. அவ்வொலியே தமிழ் வேதத்தின் ஆரம்பமாயது.

மனிதனுக்கு புலன்கள் — உலகத்தை உணருந் தன்மை—ஐந்து வகையாகும். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவையே அவை. அவற்றில், சுவையுணர்வை ஒன்றை உண்ணும் போது மட்டுமே உணர முடியும். ஒளி அறிவை ஒன்றைக் காணும் போது—கண்ணைத் திறந்த பிறகே — அறிய முடியும். ஸ்பரிச அறிவை இன்னொன்று தொடும்போது மட்டுமே தெரிய முடியும். நாற்ற அறிவையும் துர்கந்தமோ — நற்கந்தமோ வீசும்போது மட்டுமே அறிய முடியும். ஆனால் ஓசை அறிவோ எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தடையும் இல்லாமல் அறியும் அறிவாகும். பிறந்த குழந்தைகட்கும் முதலில் தோன்றுவது ஓசை அறிவே ஆகும்.

ஆதலால் ஞான சம்பந்தரும், கடவுளைப் புகழ்ந்து இன்னான் என்று காட்டுவதற்கு முதலில் செவியையே புகழ்கிறார். "எனக்குப் பால் தந்தவன் யார் எனிலோ, தோடுடைய செவியன், அவன் ஏறுவதோ எருது, அவன் சூடுவதோ வெண்மதியாகும், அவன் பூசுவதோ சுடலைச் சாம்பல். அவன் உறையுமிடமோ வீசு புகழ்ச் சீர் காழியாகும். அத்தகையான் முன்னோர் நாள்—இப் பிறவிக்கு முன், என் உள்ளங் கவர்ந்த கள்வனாயினன். ஆதலால் இதழ் விரி மலரால் அர்ச்சித்துப் பணிந்தேத்தினேன். அப்பெருமானே இன்று அருள் செய்தனன். அவனே இவன். என்று தம் கையால் சுட்டி நின்றனர். என்னே?

தோடுடைய செவியன் விடை
  யேறியோர் தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி
  என் உள்ளங் கவர் கள்வன்
எடுடைய மலரான் முனை
  நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
  பெம்மா னிவனன்றே.

எனப் பாடியுள்ளனர்.

இங்கு பிரமபுரம் என்பது ஒரு சிலேடைச் சொல் ஆகும் காழிப் பதியைப் பொதுவாகக்குறித்துப் பாடினாராலும், அதில் ஓர் சூக்ஷ்மமான கருத்தும அடங்கி இருக்கிறது. பின் இரண்டடியை "ஏடுடைய மலரான் முனை நாட் பணிந்தேத்த பிரமாபுரம் மேவி அருள் செய்த பெம்மான் இவன்" என்று கூட்டுக. முனை நாள்—முன் முருகவேளாக இருந்த காலை-மொட்டவிழ் முல்லைகளாலும், கூர் இளமலராங் கொன்றைகளாலும், சிவனை அர்ச்சித்து—ஞானசக்தி—வேலாயுதம்—வேண்டித் தவமிருந்தபோது தன்னுள் விளங்கி— ஞான சக்தியைத் தந்து தன்னைப் பிரம்மமாக்கிய பெம்மான் இவன் என்பதும் கருத்தாகும்.

பிரமம் — முழுமுதற் கடவுள். இப் பிரமம் தான் என அறிதலே சங்கரர் கூறிய சன்மார்க்கமாகும். ஞானசக்தி பெறும் வரை— வேலாயுதம் தரிக்காத காலத்தில் முருகனுக்குத் தனியாக ஆற்றல் இல்லை என்பது தத்துவமுணர்ந்தோர் கருத்தாகும். இங்கே தாம் பிரம்மம் என அறிதலே ஞான சக்தியாகும் என்க.

ஏடுடைய மலரால் அர்ச்சித்துப் பணிதல் முதலிய கிரியைகளைச் செய்தால், ஏத்துதல் நாமம் நவிற்றலாதியவாம் யோகம் கைகூடும். ஞான பானின் பெருமைகளையெண்ணித்துதித்துக் கொண்டிருந்தால், துதிப்பவன் தானே அந்த ஞான பானுகின்றான். மனம் எதை நினைத்துக் கொண்டிருக்கின்றதோ அத்தன்மையதே ஆகும் என்பதே அறிஞர்களின் கருத்தாகும்.

இங்கு ஞானசம்பந்தர் தம் தந்தையாருக்கும், பிற் காலத்தில் பாடித் துதித்துப் பயனடைய நினைக்கும் நமக்கும், தம் தேவாரம் மூலமாகக் கூறுகிறார். என்ன கூறுகிறார்? "நீங்கள் பரம் பொருளைக் கிரியை யாதிகளால் பாவி, பின் அவன் புகழ்பாடி அம் மயமேயானால் நீங்களே அப்பரம்பொருளாகிறீர்கள். எங்கும் உள்ள இறைவனார் உங்களுக்குள்ளும் வந்து நின்று அருள் செய்வார். யானும் முன்னைநாள் பணிந்தேத்தினேன். பின் பிரம்மமாயினேன். என்னையே பெருமை பெற்ற உறைவிடமாகக் கொண்டருள்செய்தனன் பெம்மான். ஆதலால் ஊழிகள் தோறும்—பிறவிகள் தோறும்—எல்லாச் சீவர்களிலும் நிறைந்து விளங்கி விளக்கஞ் செய்கின்றவன் யானே என உணருங்கள். பின் நீங்கள் தோடணிந்து, விடையேறி, மதி சூடி, பொடி பூசிய தூயோனு

"கவே ஆகுவீர்" என்பதே ஆகும்.

ஆதலால் நாமும் தினசரி தேவாரங்களைப் பண்ணுடன் இசைத்துக்கொண்டிருப்பதில் பயனில்லை. அதில் கூறியிருப்பதென்னவென்றுணர்ந்து—சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து—அதன்படியே நடப்பதே தேவாரம் அருளிய திருஞானசம்பந்தருக்கு நாம் செய்யும் நற்றொண்டாகும்.

வைகாசித் திங்கள் மூலத் திருநாள் திருஞானசம்பந்தர் திருநல்லூர்ப் பெருமணத்தில் திருமணக்கோலத்துடன் திவ்ய சோதியில் கலந்த திருநாளாகும். அன்று எல்லா ஆலயங்களிலும் விசேட பூசை முதலியன நடக்கும். தேவார அன்பர்கள் தேவார இன்பத்திலே திளைத்து மகிழ்வர். அன்று நாம் செய்ய வேண்டுவது என்னவெனில் தேவாரத்தை உருக்கத்துடனும் பொருள் தெரிந்தும் ஓத வேண்டும். எந்த எண்ணத்துடன் ஓத வேண்டும்? யாரோ முற்காலத்திய பெரியார் ஒருவர் பாடிச்சென்ற பாடல்களைப் பாடுவதாக நினைத்து—தேவாரத்திற்கு அந்நியமாக நின்று—பாடினால் ஒருவித நன்மையும் இல்லை. தேவாரம் பாடுவது தாமே என்றும், தம் கைவளை சோர உள்ளங் கவர்ந்த கள்வனையே தாம் பாடுவதாகவும் நினைத்து ஓதினால் தேவாரம் வேறு, தான் வேறு என்ற நினைப்பற்றுவிடும். அந்நிலையில் தான் தேவார இன்பத்திலேயே தோய்ந்து மகிழ முடியும். அம்மகிழ்வே முக்தியென்பது. அதுவே நான் யார் என்னுங் கேள்விக்கு விடையளிப்பதாகும். ஆதலால், அன்று தேவார அன்பர்களெல்லாம் மேல் கூறிய பெருமான் புகழைப்பாடி பிறவா நெறியடைதலே கடமையாம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காத்துக் கொள்ளும் வகையில் ஒரு எச்சரிக்கையும் செய்கிறார். எடுத்துவந்த வினையை அனுபவித்துத் தீர்க்கவேண்டுமே தவிர எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் ஏறு வினையை ஏற்றிக்கொள்ளாத வகையில் நாம் வாழ வேண்டும் என்கிறார். கேட்டால் போதுமா? வழிபட்டால் போதுமா? வாழ்க்கைப் பாதையில் இறைவனைச் சந்திக்க வேண்டும். இப்படிச் சந்தித்தவர்கள் பட்ட துன்பம் சொல்லொணாதது. பெரிய புராணம் முழுவதும் சோதனைப் புராணமாகவே இருக்கிறது. தூய்மலர்க் கழலும் பெற்று, இறைவன் காட்சியும் பெற்ற மணிவாசகர் இடையில் நிகழ்ந்த சோதனைகளைத் திருக்கழுக்குன்றத்தில் பாடிய கடைசி பதிகத்தில் கடைசி வரிகளில் நினைந்து பாடுகிறார். இறைவன் காட்சி கண்ட அப்பரவச நிலையிலும், பரவசத்தில் திளைத்துப் பாடிய அக்கடைசி பாடலிலும் சோதனைகளை நினைத்தார் ஞானத்தில் ஞானி என்றால் ஆரம்ப நிலையில் உள்ள நாம் எதை நினைப்பது?

சோதனைகளைக் கடந்தவர்கள் நம் முன்னோர். அவர்கள் வழி வந்த நாமும் வருங்காலச் சோதனைகளைக் கடந்து செல்லத் தயாராக இருக்கவேண்டும். இப்படிப்பட்டவர்களையே, அருள், அப்பனிடம் அழைத்துச் செல்லுகிறது. இதனால் ஆசிரியர் முன் எச்சரிக்கை கொடுத்திருக்கிறார். எவனோ உணவு சாப்பிடும் போது இறந்துவிட்டார் என்பதனால் நாம் சாப்பிடாமல் இருக்கிறோமா? எப்படிப் பட்ட ஆபத்தையும் சமாளித்து உலக வாழ்க்கையில் செல்லும் போது எச்சரிக்கையைக் கண்டு பயந்து அருள் வாழ்க்கையினின்றும் ஒதுங்கிவிடலாமா? வெயிலில் கட்டப்படாதார்க்கு நிழலின் அருமை தெரியுமா? அருள் நிழலில் வாழவேண்டுமானால் உலகத் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இதைப் பொறுத்துக் கொள்ளும் வன்மை பெறாது வேறுவகையில் சென்றால் எடுத்து வந்த வினை வேறுருபமாக வந்து அச்சுறுத்தும். அந்த நோத்தில் தாங்குவார் இல்லாமல் தவிப்போம். அப்படித் தவிப்பதை இப்படி வந்து அருளே நோக்கமாகப் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ் என்று பொறுத்துக் கொண்டால் எவ்வளவு நல்லது? நாதத்தோடு சேர்ந்து இப்பொறுமையில் பழகும் வாய்ப்பைக் கொடுக்கும் ஆசிரியாது அருள் வாக்கு சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட வார வழிபாட்டின்போது தொடர்ந்து எழுகின்றது. இனி சிலர் மட்டுமன்றி எல்லோருமாக அவ்வழிச் செல்வோமாக!

வாழ்க தமிழ் மறை!
வாழ்க சீர் அடியார் எல்லாம்!!

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

சில பொன்மொழிகள்

பிறர்க்கு நன்மை செய்பவன் தனக்கும் நன்மை தேடிக்கொள்கிறான்.

—செனீக்கா.

உலகத்தார் நாடும் பெருமைகளை வேண்டேன். உண்மையை அறிவதொன்றே என் விருப்பம்.

—சாக்ரட்டீஸ்.

உலகமே என் நாடு, நன்மை செய்வதே என் சமயம்.

—தாமஸ்பெயின்.

மன மகிழ்ச்சியே உடல் நலத்திற்கு முக்கிய காரணம்.

—மார்பி.

குழந்தைகளின் எதிர் காலம் எப்போதும் தாயின் செயலில் அடங்கியிருக்கிறது.

—நெப்போலியன்.

PHONE 55034 TEL. ENKAYAM

கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குத்தெரு சென்னை 1.

"முல்லைக் கொடி"

(குருகுலக் கிழமை வெளியீடு)

16-10-53-கலைமகள் விழாவுடன்

5-ம் ஆண்டு நிறைவுறும்.

23-10-53-ல் 6-ம் கிளை

முதல் தவிர் தவிர்க்கும்.

நேயர்கள் தம் கைபொப்பங்களை 31-10-53-க்குள்

கிடைக்கும்படி அனுப்பிவைப்பார்களாக!

—ஆ.

இது செய்வதற்கு அருமையானது என்று சோர்வுறாமல் இருக்கவேண்டும். அதைச்செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும்.

—திருவள்ளுவர்.

படிப்பில் விருப்பமற்ற அரசனாயிருப்பதை விட ஏராளமான நூல்களையுடைய ஏழையாக இருப்பதையே விரும்புவேன்.

—மேக்காலே.

இளம் மனசு எப்போதும் உண்மைக்கு வெகு சமீபத்திலேயே இருக்கும்.

—மாக்சிம் கார்க்கி.

அவன் விதி அவனவன் கையிலே இருக்கிறது.

—விவேகாநந்தர்.

உழைத்துத் தேய்வதைக் காட்டிலும், சோம்பேறித்தனம் துருப்போல மனிதனை விரைந்து தின்று விடும்.

—ரிச்சார்டு சாண்டர்ஸ்.

நன்மைக்கு ஆதரவளித்து வளர்ப்பதைவிட, தீமையை எதிர்த்து முறியடிப்பது மிகவும் முக்கியம்.

—காந்தியார்.

மனிதர்கள் செய்யும் காரியம், அவர்களின் சொல், இவைகளைக் கொண்டுதான் நாம் நேர்மையை அளக்க முடியும்.

—ராகுலசாங் கிருத்யாயன்.

நல்லது என்பதற்காகவே நல்லதைச் செய்யவேண்டும். அது சொர்க்கத்திற்கு வழிகாட்டும் என்பதற்காகவல்ல.

—பெட்ர்ராண் ரஸ்ஸல்

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)